1978 பிப்ரவரி 27]

வாசுதேவநல்லூர் தொகுதியில் உள்ள கிணறுகள், குளங்கள், நிலங்கள்.

*283 வினா—திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாசுதேவநல்லூர் தொகுதியில் புயலால் கிணறுகள், குளங்கள், நிலங்களில் மண் மூடியிருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுக்க உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:

(அ) 1976–77 ஆம் ஆண்டில் புயலால் இப்பகுதி பாதிக்கப்பட்டது.

(ஆ) 17 குளங்கள், 9 நீர்ப்பாசன கால்வாய்கள், ஒரு அணைக்கட்டு ஆகியவற்றை செப்பனிடுவதற்காக ரூ. 5·42 லட்சம் செலவு செய்யப்பட்டது.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவரவர்களே, இன்னமும் புளியங்குடி போன்ற பகுதிகளில் கிணறுகளில் புயல் புழுதி மூடியிருக்கிறது. அதை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அரசாங்கத்தைப் பொறுத்தவரை, ஏரி, குளங்கள் மணல் மேட்டிருந்தால் அதைத்தான் அகற்ற நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல கிணறுகளில் மேடிட்டிருக்குமானால், அதற்குத் தனிக் கேள்வி போடவும்.

திரு. ரா. கிருஷ்ணன்: ஏற்கனவே புதைந்து கிடக்கின்ற கிணறுகளிலிருந்து மண்ணை எடுக்க அரசு கடன் வழங்கும் திட்டம் ஏதாவது இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இது விவசாயத் துறை சம்பந்தப்பட்டக் கேள்வி.